வாசிக்க: 1 தெசலோனிக்கேயர் 5:1-11

***"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனுடைய செயல்களுக்கேற்ப அவனுக்கு நான் அளிக்கவிருக்கும் கைம்மாறு என்னோடு வருகிறது" (வெளி 22:12)***

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி நினைக்காத ஒரு மந்தநிலை ஆன்மீக வட்டாரங்களில் காணப்படுகின்றது. நாம் அவரை விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும், அல்லது வருகையை நம்பினாலும் நம்பாவிட்டாலும், இரண்டாம் வருகை நிச்சயம் நடைபெற்றே தீரும். இந்த வருகை யாருக்கும் தெரியாமல் வரும். "பிதாவைத்தவிர மற்றொருவரும் அறியார்கள்" என்று மத்தேயு 24:36இல் பார்க்கிறோம். மேலும் சற்றும் எதிர்பாராத வேளையில் அது "திருடனைப்போல்" வரும். நாம் அசதியாக "இப்போது இருக்காது" என்ற மமதையில் இருக்கும்போது திடீரென அந்த நாள் வந்துவிடும் (வெளி 22:20).

கிறிஸ்து ஏன் திரும்பவும் வரவேண்டும் என்று பலருக்குக் கேள்வியுண்டு. அவருடைய பிள்ளைகளை விண்ணுலகிற்கு அழைத்துச் செல்லவே என்ற பதில் எவ்வளவு இனிக்கிறது! அவர் இருக்கின்ற இடத்தில் நாமும் தங்க அவருக்குப் பிரியம் (யோ 14:3). அதுமட்டுமல்ல, நமது செயல்களுக்குப் பலனுண்டா என்ற ஏக்கத்துடன் வாழும் பரிசுத்தர்களுக்கு அவர் நீதி செய்கிறவராய் வரப்போகிறார். அப்பொழுது இவ்வுலகையும் நியாயமாக தீர்ப்புச்செய்வார் (சங் 96:13).

ஆண்டவரின் இரண்டாம் வருகை நெருங்கி வருகிறது என்பதற்கான அடையாளங்கள் நிறையவே நிறைவேறிவருகின்றன. அதில் மிக முக்கியமான ஒன்று அன்பும், விசுவாசமும் குன்றிப்போதல். "அநேகருடைய அன்பு தணிந்துபோகும்" என்று மத்தேயு 24:12 கூறுகிறது. அதிமுக்கியமான விசுவாசம் காணப்படுமோ என்று ஒரு சந்தேகம் எழும்புகிறது (லூக் 18:8). மேலும் விசுவாசத் துரோகமும், துர்வுபதேசங்களும் விரைவாகப் பரவுவதைக் காண்கிறோம் (2 தீமோ 3:13; யூதா 18; 2 பேது 3:3,4). ஆனாலும் ஓர் அபரிமிதமான ஆவியின் அருள்மாரியும் ஊற்றப்படவிருக்கிறது. "கடைசி நாட்களில் நான் உடலுள்ள யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்று (யோவேல் 2:28,29) கூறப்பட்டுள்ளபடி இன்றைய நாட்களில் பல இடங்களில் எதிர்பாராத மக்கள்திரள் தூயாவியின் நிறைவைப் பெறுவதைக் காணலாம். என்றுமில்லாத வேகத்தில் திருச்சபை வளர்ந்துகொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு 75000 பேர் திருச்சபையில் சேருகிறார்கள்.

ஆண்டவரின் வருகையை நாம் தைரியமாக எதிர்கொள்ள பரிசுத்தம் இன்றியமையாதது (1 யோ 3:1-3). ஜெபத்தில் எப்போதும் விழித்திருக்கவேண்டும் (லூக் 21:36). நற்செய்திப்பணியில் தீவிர ஈடுபாடு கொள்ளவேண்டும் (லூக் 19:13; மத் 24:14,46). "இயேசு கிறிஸ்து திரும்ப வருகிறார் என்ற செய்தி நாம் வானம் பார்த்து நட்சத்திரங்களை எண்ணுவதற்காக அல்ல; அது நம்மைப் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு தீவிரமாய்ச் செயல்படச் செய்யவேண்டும்" என்று அறைகூவினார் *C. H. ஸ்பர்ஜன்.*

*மண்ணின் மாந்தரும் விண்ணின் வேந்தரும்*
*பின்னிப் பிணைவ தென்னே மகிமை!*
*வெற்றி வாகை சூடும் வீரர் நாம்*
*பெற்றுக் கொண்டிடுவோம் சுதந்திரம்! — V. எசேக்கியா பிரான்சிஸ்*